


சென்னை பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளமாநில வள மையத்தினை நேற்று முன்தினம் (21.01.2026) பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. சந்தர மோகன்.பி, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர் மரு. மா.ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர். ச.கண்ணப்பன், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் திருமதி. ந.லதா, தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர். ச.சுகன்யா, இணை இயக்குநர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாக தென்கிழக்கு மூலையில், செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும், புதுக்கோட்டை மன்னர் இராஜகோபால தொண்டைமான் அவர்களின் அருங்காட்சியகத்துடன் கூடிய நினைவு மணிமண்டபத்தின் கட்டுமானப் பணியினை, அமைச்சர் எஸ்.ரகுபதி, அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 18.01.2026 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன் முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மேயர் திலகவதி செந்தில் , மரு.வை.முத்துராஜா எம்.எல்,ஏ., எம்.சின்னத்துரை எம்.எல்.ஏ. மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### கல்லூரிக் கல்வித் துறையில் பணியாற்றும்

# 164 ஆசிரியர்கள் - 91 பணியாளர்களுக்கு இடமாறுதல் ஆணைகள்!

## அமைச்சர் – முனைவர் கோவி. செழியன் வழங்கினார்!

சென்னை, ஜன. 23 -

சென்னை, கல்லூரிக் கல்வி இயக்ககத்தில், நேற்று முன்தினம் (21.01.2026) நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் 164 ஆசிரியர்கள் மற்றும் 91 ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்குப் பொது இடமாறுதல் கலந்தாய்வு (General Transfer Counselling) மூலம் பணிமாறுதலுக்கான ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் உயர்கல்வியில் பல்வேறு நலத்திட்டங்களைஅறிமுகப்படுத்திச் செயல்படுத்தி வருகிறார். கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் (2021 - 2026), 36 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. அரசு கல்லூரிகளில் பல்வேறு புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சிறந்த முறையில் கல்வி புகட்டிடவும், கல்லூரி நிர்வாகத்தினைத் திறம்பட நிர்வ கிக்கவும் அண்ணா மேலாண்மை மையம் வாயிலாக அனைத்து அரசு கல்லூரி முதல்வர்களுக்கும் நிர்வாகப் பயிற்சி வழங்கப் பட்டுள்ளது. மேலும், மாநில உயர்கல்வி மன்றம் வாயிலாக அரசு கல்லூரிகளில் பணிபுரியும் அனைத்து அறிவியல் ஆசிரியர்களுக்கும் சிறந்த முறையில் நவீனப் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க உயர்கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் அலுவலர்களின் நலன் கருதி விருப்பப் பணியிட மாறுதல் நடத்த அறிவுறுத்தப்பட்டுக் கடந்த 24.12.2025 அன்று முதல் 05.01.2026 வரை இணையவழியாகப் பொதுக் கலந்தாய்வு நடைபெற்றது. இந்தப் பொது இடமாறுதல் கலந்தாய்வில் மொத்தம் 340 ஆசிரியர்கள் விண்ணப்பித்திருந்தனர். அதேபோல், கல்லூரிக் கல்வி இயக்ககம், மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்ககம் மற்றும் அரசு கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லாப் பணியாளர்களிடமிருந்து 256 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதில் தகுதிவாய்ந்த 164 ஆசிரியர்களுக்கும் மற்றும் 91 ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கும் இடமாறுதலுக்கான ஆணைகளை அமைச்சர் கோவி. செழியன் வழங்கினார். உயர்கல்வியில் வெளிப்படைத் தன்மை என்ற தமிழ்நாடு அரசாங்கத்தின் கொள்கைக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக இப்பொதுக் கலந்தாய்வு நிகழ்வு அமைந்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறைச் செயலாளர் முனைவர் பொ. சங்கர், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ. சுந்தரவல்லி மற்றும் கல்லூரிக் கல்வி இயக்கக அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர், டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் 24.01.2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில், எடப்பாடியில் உள்ள, “ஸ்ரீ நடராஜன் மஹால் திருமண மண்டபத்தில்”, மாவட்ட கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள்–முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்று சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1) ஜனவரி 20 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் அவர்கள்தலைமையில்நடைபெற்றமாவட்ட கழகசெயலாளர்கள்கூட்டத்தில்நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து.

2) சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு (SIR) குறித்து.

3) கழக ஆக்கப்பணிகள் குறித்து.

**டி.எம்.செல்வகணபதி**

செயலாளர், சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க

### நாகை மாவட்டத்தில்

# மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை முகாம்கள்!

## மீனவர் நல வாரியத் தலைவர் அ.ஜோசப் ஸ்டாலின் சிறப்புரை!

நாகை, ஜன. 23 -

கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த உத்தரவிட்டிருந்தார். அதன்படி தமிழகம் முழுவதும் 100 இடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு அங்கமாக நாகப்பட்டினம் மாவட்டம், அக்கரைப்பேட்டை, நம்பியார் நகர், செருதூர், ஆற்காட்டுத்துறை ஆகிய மீனவ கிராமங்களில் சிறப்பு முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான ஜோசப் ஸ்டாலின் பேசுகையில், “முதல்வர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் நாகப்பட்டினம் மாவட்ட மீனவ கிராமங்களுக்கு ஏராளமான திட்டங்கள் வந்துள்ளது. அதில் மிகச் சிலவற்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தப்பட்டுள்ளது. நம்பியார்நகர் மீனவ கிராமத்தில் கடல் அரிப்பினை தடுக்க 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் நேர்கல் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. நாகூர் பட்டிணச்சேரி மற்றும் கீச்சாங்குப்பம் பகுதிகளில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடல் அரிப்பு தடுப்பு சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில், சாமந்தான்பேட்டை மீனவ கிராமத்தில் சிறிய அளவிலான மீன்பிடித் துறைமுகம் கட்ட 32.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அடிக்கல்லும் நாட்டப்பட்டுள்ளது.வேளாங்கண்ணியைப் பொறுத்த வரை கடல் அரிப்பு தடுப்பு பணிகளுக்கு 18 கோடி, அங்கு புதிய மீன்பிடி ஏலக் கூடம் அமைக்க 84 லட்சம் ரூபாய் என இருதிட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மீனவர்கள் சந்திக்கும் முக்கியப் பிரச்சினைகளில் ஒன்று இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவது! இதை தடுக்கவும், கைது செய்யப்பட்டவர்கள், மற்றும் அவர்களின் படகுகளை மீட்கவும் கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் ஒன்றிய அரசுக்கும், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். முதல்வர் அவர்கள் மீனவர்களின் பக்கம் எப்போதும் அரணாக நிற்கிறார்.

அந்தவகையில் தான், இலங்கை அரசால் சிறை பிடிக்கப்பட்டு மீட்க இயலாத நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 32 மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் 5 நாட்டுப்படகுகளுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து 192.5 லட்சம் ரூபாய் இதுவரை நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

மீனவர்களின் குரலுக்கு எப்போதுமே செவிமடுத்துக் கேட்கும், கழகத் தலைவர் அவர்கள் மீன்பிடித் தொழில், மற்றும் அதன் உபதொழில்கள் செய்யும் ஒருவர்கூட விடுபடாமல் நலவாரியத்தில், உறுப்பினராக சேர்க்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார். நலவாரியத்தில் உறுப்பினர் ஆவதால் ஏராளமான நன்மைகள் இருக்கின்றன.

மீன்பிடித் தொழிலின் போது ஏற்படும் உயிரிழப்பிற்கு 2 லட்சம் ரூபாய் இழப்பீடாக வழங்கப்படும். இயற்கை சீற்றத்தினாலோ, பேரிடரினாலோ கடலில் மீனவர்கள் காணாமல் போனாலும் நலவாரிய உறுப்பினராக இருக்கும் மீனவரின் குடும்பத்திற்கு 2 லட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும்.

இதேபோல் நலவாரியத்தில் உறுப்பினராக இருக்கும் மீனவர் இயற்கை மரணம் அடைந்தால் 25000 ரூபாயும், அவரது ஈமச்சடங்கு செலவிற்கென 2500 ரூபாயும் வழங்கப்படும். நலவாரியத்தில் உறுப்பினராக இருப்பவரின் மகன், மகளுக்கு ஆண்டு தோறும் கல்வி உதவித்தொகையும் கிடைக்கும். இப்படி இன்னும் ஏராளமான திட்டங்கள் நலவாரியத்தில் உள்ளது.

அதையெல்லாம் பயன்படுத்திக்கொள்ள உறுப்பினர் ஆவது அவசியம். நலவாரிய உறுப்பினரான நீங்கள் இதில் இருக்கும் திட்ட ங் கள் குறித்தும் புரிந்து கொள்ள வேண்டும்”இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் மாநில மீனவர் அணி துணை செயலாளரும், நலவாரிய உறுப்பினருமான கோ.மனோகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் க.ராஜேந்திரன், தாமஸ் ஆல்வா எடிசன், வேதாரண்யம் நகர கழக செயலாளரும், நகர்மன்ற தலைவருமான மா.மீ.புகழேந்தி, மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பாலமுரளி, மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் மோகன்தாஸ் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகளும், மீன்வளத்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டத்தில் நடைபெற்ற மீனவர் நல வாரிய உறுப்பினர் சேர்க்கை முகாமில் மீனவர் நல வாரியத் தலைவர் அ.ஜோசப் ஸ்டாலின் பங்கேற்று உறுப்பினர் அட்டையை வழங்கினார்.

# சட்டமன்றத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவி தொடர் சண்டித்தனம் செய்வது கண்டிக்கத்தக்கது!

## விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன் குமார் அறிக்கை!



சென்னை, ஜன. 23 -

விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் வழக்கம்போல் இந்த ஆண்டும் சட்டசபைக்கு வந்து, பிரச்சனை களை ஏற்படுத்திவிட்டு, வெளிநடப்பு செய்துள்ளார். ஜனநாயகத்தின் மிக முக்கிய அங்கமாக விளங்கக்கூடிய சட்டமன்றத்தை ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் தொடர்ந்து கேலிக் கூத்தாகி வருவது கடும் கண்டனத்திற்குரியதாகும்.

தமிழ்நாட்டு முறைப்படி அதாவது தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் பாடிவிட்டு, இறுதியில் ஜனகன மன என்ற தேசிய கீதத்தை பாடுவது மரபாக இருந்து வருகிறது. ஏற்கனவே தமிழ்த்தாய் வாழ்த்து அடுத்து தேசிய கீதம் பாட வேண்டும் என்ற ஆளுநரின் கோரிக்கைக்கு தமிழ்நாடு அரசால் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் வேண்டுமென்றே ஒவ்வொரு ஆண்டும் இதே பிரச்சினையை முன்வைத்து சட்டப்பேரவையை அவமதித்து வெளிநடப்பு செய்வது ஆளுநர் ரவியின் வாடிக்கையான செயலாக அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டு மக்களின் முழுமையான ஆதரவை பெற்று ஆட்சி அமைத்துள்ள திராவிட முன்னேற்றக் கழகம், மக்களுக்கான பணிகளை, திட்டங்களை விவாதிப்பதற்கான சட்டமன்றத்தை முடக்குகின்ற வகையில் ஆளுநர் தொடர்ந்து சண்டித்தனம் செய்து வருவது 8 கோடி தமிழ்நாடு மக்களை இழிவுப்படுத்தும் செயலாகும். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் எதிர்க் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் இப்படி ஜனநாயக படுகொலை ஆளுநர்களால் மேற்கொள்ளப்படுவதை ஒன்றிய அரசும் குறிப்பாக பிரதமர் மோடி அவர்களும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது இந்திய ஜனநாயகத்திற்கு பேராபத்தாகும்.

ஆளுநர் வெளிநடப்பு செய்த உடனே ஆளுநர் மாளிகையில் இருந்து அறிக்கை வெளியிடப்படுகிறது. அதாவது ஏற்கனவே தயாரிக்கப்பட்ட அறிக்கை ஆளுநரின் வெளி நடப்பை அடுத்து வெளியிடப்படுகிறது. அந்த அறிக்கை என்பது ஒரு எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கையை விட மோசமானதாக உள்ளது. இரண்டு இலக்கு பொருளாதார வளர்ச்சியுடன் இந்தியாவில் முதன்மை மாநிலமாக உள்ள தமிழ்நாட்டை விமர்சனம் செய்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. உயர் கல்வி பயில்வோரின் தேசிய சராசரி விகதத்தை போன்று இரண்டு மடங்கு தமிழ்நாட்டில் உயர் கல்வி பயில்வோரின் விகிதம் உள்ளது.

கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு போன்றவற்றில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. வட மாநிலங்களை சேர்ந்த லட்சக்கணக்கானத் தொழிலாளர்களின் வாழ்வாதரமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. இப்படிப்பட்ட நிலையில் ஒரு ஆளுநர் எதிர்க்கட்சியை போன்று சகட்டு மேனிக்கு மாநில அரசை விமர்சிப்பது எந்த அளவிலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். எனவே பிரதமர் மோடி அவர்கள் உடனடியாக தமிழ்நாட்டு ஆளுநரை திரும்ப பெற வேண்டும் என விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சலனப்படாமல்

# நித்தமும் உதிக்கிறது உதயசூரியன்!




**அ**ன்று...

தி.மு.க.வுக்கும்
எங்களுக்கும்
தான்
போட்டி என்றது காங்கிரஸ்...

அப்புறம்

தி.மு.க.வுக்கும்
எங்களுக்கும்
தான் போட்டி
என்றது அ.தி.மு.க...

இடையில்
தி.மு.க.வுக்கும்
எங்களுக்கும்
தான் போட்டி
என்றது ம.தி.மு.க.

அதற்கிடையே

தி.மு.க.வுக்கும்
எங்களுக்கும் தான் போட்டி
என்றது தே.மு.தி.க..

அடுத்து

தி.மு.க.வுக்கும்
எங்களுக்கும் தான் போட்டி
என்றது நா.த.க.

அதுமட்டுமா

தி.மு.க.வுக்கும் எங்களுக்கும்
தான் போட்டி என்றது பா.ஜ.க..

இப்ப

தி.மு.க.வுக்கும்
எங்களுக்கும் தான் போட்டி
என்கிறது த.வெ.க...

ஆம்
தி.மு.க.வை

எதிர்ப்பவர்கள்
வந்து போகிறார்கள்
போய்
வருகிறார்கள்..

ஆனால் தி.மு.க.

தன்னை
எதிர்க்க
வருபவர்களை

வரவேற்று
மகிழ்கிறது

வாழ வைத்தும்
நெகிழ்கிறது

வழி அனுப்பியும்
வைக்கிறது...

தன்னைத்
தானே சுற்றிக் கொண்டு

சூரியனை
சுற்றி வரும்
பூமிக் கோளமாய்
அநேக
அவதாரங்களை
கடந்து

சலனப்படாமல்
நித்தமும்
உதிக்கிறது

உதயசூரியன்..

**என்னநாஞ் சொல்றது**

**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித்
தொடர்புக் குழு
துணைத் தலைவர்





முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு, கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில், கரூர், அரசு காலனி வாங்கல் சாலையில், மொத்த பரிசுத்தொகை ரூ. 2,12,000/ மற்றும் கோப்பைகளுக்கான மாபெரும் குதிரை வண்டி எல்கை பந்தயத்தை கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்து, வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுத் தொகையும், வெற்றி கோப்பைகளையும் வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர் .